## வடகிழக்கு பருவமழை:

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

### ஆங்கில நாளேடுகள் படப்பிடிப்பு!




---

### வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாடு – சீரமைப்புப் பணிகள் மேற்பார்வை செய்ய

## நெடுஞ்சாலைத் துறை மூலம் 7 பொறுப்பு அலுவலர்கள் நியமனம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக். 23 -

வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்ய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பொறுப்பு அலுவலர்களாக 7 தலைமைப் பொறியாளர்கள் நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

13.10.2025 அன்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், நெடுஞ்சாலைத் துறையின் பணிகளின் முன்னேற்றம் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழ்நாட்டில் எதிர்வரும் வடகிழக்குப் பருவமழையை கருத்தில் கொண்டு, வெள்ள நிலைமையை சமாளிக்க 10 நெடுஞ்சாலை வட்டங்களில் உள்ள சாலை மற்றும் பாலங்களை திறம்பட கண்காணித்து, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சீரமைப்புப் பணிகள் ஆகியவற்றை துரிதமாக மேற்கொள்வதற்கு தலைமைப் பொறியாளர் நிலையில், 7 தலைமைப் பொறியாளர்கள் வெள்ள கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னை வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் கே.ஜி.சத்தியபிரகாஷ், விழுப்புரம் வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் எம்.பன்னீர்செல்வம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் ஆர்.கிருஷ்ணசாமி, மதுரை வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் எம்.சரவணன், திருநெல்வேலி வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், திருவண்ணாமலை மற்றும் சேலம் வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் ஜெ.தேவராஜ், திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் வட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் பி.செந்தில் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பருவ மழையின்போது நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதேனும் தேவைப்பட்டாலும், மழை நின்ற பிறகு சீரமைப்புப் பணிகள் ஏதேனும் தேவைப்பட்டாலும், அந்தந்த வட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர்களை தொடர்பு கொள்ளலாம்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 153 | மே.பொ. / இ - I / வ.செ.அ.மி.நி - 2 | NCTPS II MI Circle BM Division Unit I 600 Mw Boiler Providing cup lock metallic scaffoldin |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5763/ஒப்பந்தப்புள்ளி/2025


---

### வடகிழக்கு பருவ மழை தீவிரம் – தமிழ்நாட்டில்

## சென்னை உட்பட 9 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை!

### அணைகள் – ஏரிகள் வேகமாக நிரம்புகின்றன!

சென்னை, அக்.23-

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இந்த நிலையில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அடுத்த 3 மணி நேரத்துக்குள் அதாவது காலை 8.30 மணிக்கு அது காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது. இதன் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது.

காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தமிழக கடலோர பகுதியை நெருங்கி நீடித்தது.

இதற்கிடையே காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று முன்தினம் இரவு மேலும் சற்று வலுவடைந்தது. நேற்று (புதன்கிழமை) மாலைக்குள் அது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அதாவது புயல் சின்னமாக வலுவடையும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

இதன் காரணமாக வட மாவட்டங்களில் இன்று பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறி உள்ளது.

புயல் சின்னம் வலுவான நிலையில் நீடிப்பதால் திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு உள்ளது. இந்த 2 மாவட்டங்களிலும் நேற்று 20 சென்டி மீட்டருக்கு மேல் அதி கனமழை பெய்யும் வாய்ப்பு உருவாகி இருக்கிறது. இதையடுத்து இந்த மாவட்டங்களில் மழை பாதிப்பு ஏற்பட்டால் மக்களுக்கு உதவ அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டு உள்ளனர்.

இதே போன்று சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் ஆகிய 9 மாவட்டங்களுக்கு மிக கன மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

கோவை, ஈரோடு, நீலகிரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், திருச்சி, தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களுக்கும்

புதுச்சேரிக்கும் கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

புயல் சின்னம் தமிழக கடலோர பகுதியை நெருங்கி வருவதால் கடலோர பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. மீனவர்கள் இன்றும், நாளையும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

**ஏரிகளின் நீர் மட்டம் மழை அளவு!**

தமிழகத்தில் நேற்று மழை பொழிவு விவரங்களை சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு: விழுப்புரம் மாவட்டம் வானூர் 18.4 செ.மீ., விழுப்புரம் 16.8 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை 16.7 செ.மீ., கடலூர் மாவட்டம் கொத்தவாச்சேரி 16.6 செ.மீ., வாணமாதேவி 16.5 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் விடூர் 16.1 செ.மீ., கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு 13 செ.மீ., பரங்கிப்பேட்டை 12.5 செ.மீ., புவனகிரி 12.3 செ.மீ.,

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி 12.3 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் ஆவடி 11.7 செ.மீ., திருவாலங்காடு 11.2 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் 10.3 செ.மீ., ராணிப்பேட்டை மாவட்டம் களவாய் 9.94 செ.மீ., செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் 9.82 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் 9.4 செ.மீ.,

கடலூர் மாவட்டம் பண்ருட்டி 9 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் எலிஸ் அணைக்கட்டு 9 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி 8.9 செ.மீ., காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் 8.84 செ.மீ., ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு 8.83 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம் தண்டறை அணைக்கட்டு 8.6 செ.மீ. கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் 8.5 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது. இதேபோல், 98 இடங்களில் 4 மி.மீ. வரை மழை பதிவாகியுள்ளது.

ஏரிகளின் நீர் இருப்பு விவரம்: தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 38 மாவட்டங்களிலும் 14,141 ஏரிகள் உள்ளன. அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,040 ஏரிகளும், குறைவாக நீலகிரி மாவட்டத்தில் ஏரிகள் எதுவும் இல்லை.

இந்த ஏரிகளின் சராசரியாக 50 சதவிகிதத்திற்கும் அதிகமான அளவில் நீர் நிறைந்துள்ளன.

---



திரு.வி.க.நகர் 6–வது மண்டல அலுவலகத்தில் நேற்று (22.10.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பா.கணேசன், எச்.ஆர்.கௌஷிக், திருமதி. சரிதா மகேஷ்குமார். சொக்கலிங்கம், சரவணன், சதீஷ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

### பொதுமக்களின் கோரிக்கையின்படி – அக். 24 மற்றும் 27 தேதிகளில்

## அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் வில்லைகள்!

### பதிவுத் துறை அறிவிப்பு!

சென்னை, அக். 23 -

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஐப்பசி மாதத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழ்நாடு அரசு பதிவுத் துறை அறிவித்துள்ளது.

மங்களகரமான தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது ஐப்பசி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த நாட்களான 24.10.2025 மற்றும் 27.10.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதனை ஏற்று ஐப்பசி மாதத்தில் வரும் சுப முகூர்த்த நாட்களான 24.10.2025 மற்றும் 27.10.2025 தேதிகளில், ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**
இ. பொ. து. ந. க. எண். எம்1/2032/2025

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

**மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள பகுதிகளில் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த கையினால் எடுத்துச் செல்லும் சிறிய வகை புகைபரப்பும் இயந்திரம் (Mini Handheld Fogger) 200 எண்ணிக்கையில் ஒப்ப விதிகளின்படி கொள்முதல் செய்யும் பணி.**

**முன்வைப்பு தொகை :** ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **29.10.2025** பிற்பகல் **3.00** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **29.10.2025** பிற்பகல் **4.30** மணி

மேலும் விவரங்களுக்கு: **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5772 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **கண்காணிப்பு பொறியாளர் (இ)**